# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

**DEPOSITION OF WITNESS** (Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.129/2024**

| Deposition of Name | மீனா | Prosecution | LW-1 as PW-1 |
|---|---|---|---|
| Father Name | க/பெ. மாயபெருமாள் | Defence | |
| Village | தாண்டவன்குளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 43/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **18.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2023 ம் ஆண்டு மாதம் தேதி நினைவில் இல்லை. நான் தாண்டவன்குலம் பகுதியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரி தினேஷை எனக்கு தெரியும். அவர் வீடு எங்கள் தெருவில் தான் உள்ளது. தேதி மாதம் வருடம் நினைவில் இல்லை. ஒருநாள் சுமார் 4.00 மணிக்கு மேல் நான் தாண்டவன்குளம் பேருந்து நிறுத்தத்தில் அமர்ந்து கொண்டுருந்தேன் அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து நான் போன் செய்தால் எடுக்க மாட்டியா குச்சிக்காரி தேவிடியா என்று அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த கூர்மையான ஆயுதத்தால் எனது தலையில் குத்திவிட்டு எனது போனை எடுக்கவில்லை என்றால் இங்கேயே செத்து தொலை என்று கூறிவிட்டு என்னை தாக்கினார். எனக்கும் அவருக்கும் சம்பவம் நடந்ததிலிருந்து 2 வருடங்களுக்கு முன்பிருந்தே தகறாறு இருந்து வந்தது. எதற்கெடுத்தாலும் என்னை அடித்துக்கொண்டே இருந்தார்.

2. புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் கொடுத்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். நான் கூற போலிசார் எழுதிக்கொண்டார்கள். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக பதிவு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால், குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**